செய்தி வெளியீடு எண்.05-2016 நாள்: 01.08.2016

மத்திய சிறுபான்மை அமைச்சகம், புதுதில்லி மூலம் சிறுபான்மையினத்தைச் சார்ந்த மகளிரின் தலைமைப் பண்மை மேம்படுத்தும்/ வளர்க்கும்நயி ரோஷினி திட்டத்தின்கீழ் 2016-17ஆம் ஆண்டிற்கு விருப்பம் உள்ள அரசு/ அரசு சாரா பயிற்சி நிறுவனங்களிடமிருந்து ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எம்.லக்ஷ்மி,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

******

மத்திய சிறுபான்மை அமைச்சகம், புதுதில்லி மூலம் சிறுபான்மையினத்தைச் சார்ந்த மகளிரின் தலைமைப் பண்பை மேம்படுத்தும்/ வளர்க்கும் நயி ரோஷினி (Nai Roshini the Scheme for Leadership Development of Minority Women) என்ற திட்டத்தின்கீழ் 2016-17ஆம் ஆண்டிற்கு விருப்பம் உள்ள அரசு / அரசு சாரா பயிற்சி நிறுவனங்களிடமிருந்து Online Application Management System (OAMS) என்ற மத்திய அரசின் சிறுபான்மை அமைச்சகத்தின் www.minorityaffairs.gov.in என்ற இணைதளத்தில் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இணையதளம் மூலம் ஆன்லைன் மூலம் சமர்பிக்கப்படும் விண்ணப்பங்களே ஏற்றுக்கொள்ளப்படும். கடந்த 2012-13, 2013-14, 2014-15 மற்றும் 2015-16-ஆம் ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் ஏற்கனவே திட்டங்களை செயல்படுத்தியவர்களும் மீண்டும் புதியதாக தற்பொழுது இணையதளம் மூலமாக பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும், இத்திட்டத்தை பற்றிய கூடுதல் விவரங்கள் மற்றும் இணையதளம் மூலம் எவ்வாறு விண்ணப்பம் செய்வது என்பது குறித்து www.minorityaffairs.gov.in என்ற சிறுபான்மையின அமைச்சகத்தின் இணையதளத்தில் காணலாம் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.